31st March 1955]

THE HON. SRI M. A. MANICKAVELU :—" (a) Rs. 1.65 lakhs was allotted to South Arcot district for execution of irrigation works under the Special Minor Irrigation Programme for the financial year 1953–54.

" (b) Yes."

SRI S. THINAKARASAMI THEVAR :—" Sir, in the matter of entrusting minor irrigation contracts works, will the Government give first priority to the ayacutdars instead of entrusting them to contractors who mainly depend upon profits? I put this question with reference to the South Arcot district? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, it is a general question. If the hon. Member puts a separate question, I shall give the answer."

Planting of sesbania and prosopis seeds

* 1750 *Q.*—SRI S. R. ARUMUGAM : Will the Hon. the Minister for agriculture be pleased to state who is to bear the cost of sesbania and prosopis seeds for planting in demonstration fields and on road sides?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Under the Vanamahotsavam Scheme the cost of prosopis seeds sown on the road margins is met by the Highways department in the case of roads under the control of that department and from the Collectors' discretionary grant in respect of other roads. The cost of sesbania seed used for planting in fields is met by the ryots owning the lands in which it is sown."

SRI S. R. ARUMUGAM :—" செஸ்பேனியா செடிகளை நடுவதற்காக விவசாய மேஸ்திரிகளை டெமான்ஸ்ட்ரேடர்கள் அடிக்கடி அனுப்பிவிடுகிறார்கள். விவசாயப் பயிர்களுக்கு பூச்சி விழுந்துவிட்டதென்றால் அதற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடவேண்டுமென்று டெமான்ஸ்ட்ரேடரைக் கேட்டுக்கொண்டால், ' மேஸ்திரிகள் செஸ்பேனியா நடுவதற்குப் போயிருக்கிறார்கள் ' என்று சொல்லப்படுகிறது. செஸ்பேனியா விஷயத்திற்கு விவசாய இலாகாவினர் அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் காரணமாக சாதாரண விவசாய அபிவிருத்தி வேலைகளுக்குக் குந்தகம் ஏற்படுகிறது. அதை அவர்களால் காலாகாலத்தில் செய்யமுடிவதில்லை. செஸ்பேனியா நடுவதை விவசாயிகளின் இஷ்டத்திற்கு விட்டுவிட்டு, விவசாய டெமான்ஸ்ட்ரேடர், மேஸ்திரி முதலானவர்கள் விவசாய அபிவிருத்தி சம்பந்தமான வேலைகளில் ஈடுபடும்படி சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" விவசாயிகளின் நன்மைக்காகத்தான் செஸ்பேனியா விஷயத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால். அதற்காக விவசாய டெமான்ஸ்ட்ரேடர்கள் மற்ற வேலைகளைக் கவனிக்காமல் இருக்கக்கூடாது. விவசாய இலாகாவினர் மற்ற விவசாய அபிவிருத்தி வேலைகளைப் பறக்கணிக்காமலிருக்கும்படி சர்க்கார் பார்த்துக்கொள்வார்கள்."

[31st March 1955

SRI D. K. RAJU :—" Sir, in view of the fact that the trees are stunted in growth, what is the idea of the Government in planting them on the road sides? Is it for the purpose of shade or for any other purpose? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, it will serve not only the purpose of shade but the purpose of fuel cutting also whenever the trees are ripe for cutting."

SRI S. R. ARUMUGAM :—" விவசாய இலாகாவில் இருக்கக்கூடிய பீல்ட்மென், மேஸ்திரிகள் போன்றவர்களுக்கு ரூ. 65, ரூ. 70-க்கு மேல் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் செஸ்பேனியா, கிளிரிசீடியா போன்ற செடிகளை நடுவதற்கு அனுப்பப்படுவதினால் காலாகாலத்தில் கவனிக்கவேண்டிய மற்ற விவசாய வேலைகளை கவனிக்க முடியாமல் போகிறது. மேலும், இப்படிப்பட்டவர்கள் ஒரு நாளைக்கு இம்மாதிரி வேலையை செய்வதினால் குறைந்தது இரண்டு ரூபாய் வீதம் செலவாகிறது. தினம் இரண்டு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறக்கூடியவர்கள் செடி நடுவது, தண்ணீர் ஊற்றுவது போன்ற வேலைகளுக்கு அனுப்புவதை விட கூலி ஆட்களை நியமித்து தினம் எட்டணா கூலி கொடுத்தால் கூட இம்மாதிரி வேலைகளைச் செய்துவிடுவார்கள். தண்ணீர் ஊற்றுவது, செடி நடுவது போன்ற சிறு வேலைகளைச் செய்வதற்குக் கூட பீல்ட்மென், மேஸ்திரிகள் அனுப்பப்படாமல் இருந்தால், அவர்கள் விவசாய அபிவிருத்தி சம்பந்தமான வேலைகளிலும், பூச்சித் தொந்தரவுகளின்றும் பயிர்களைக் காப்பதற்கு வேண்டிய வேலைகளிலும் அவர்கள் ஈடுபட அவகாசம் இருக்குமல்லவா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" தண்ணீர் ஊற்றுவது போன்ற சிறிய வேலையைச் செய்கிறார்கள் என்பதற்காக மேஸ்திரிகளுக்கு சம்பளம் குறைத்துக் கொடுக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லவில்லையென்று நான் நினைக்கிறேன். வேலையைத் தகுந்தபடி செய்யவேண்டுமென்றால் பொறுப்புள்ளவர்கள் செய்வதுதான் நலம். மற்ற வேலைகளுக்குக் குந்தகம் இல்லாமல் விவசாய இலாகா சிப்பந்திகள் வேலைகளைக் கவனிக்கும்படி பார்த்துக் கொள்வார்கள்."

SRI S. PANCHAKSHARAM :—" Sir, the Hon. Minister may be aware of the fact that the hon. Member Sri P. G. Karuthiruman, a Member from Coimbatore, has expressed his views on the floor of this House more than once that sesbania is no good as green manure. Have the Government gone into the matter and if so, what is the present view of the Government? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, I have also said in this House more than once that the hon. Member Sri Karuthiruman is anexpert and that experts do differ. The Government have their own views in the matter."

SRI M. NARAYANA KURUP :—" Sir, are the Government aware that the planting of trees on the road sides damages the roads sooner than in other cases? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" That may be so. The conditions of such areas will be taken into account when the Government pursue their programme of planting trees? "

31st March 1955]

SRI S. DAIVASIGAMONEY :—" Sir, may I know from the Hon. Minister as to what are the advantages the ryots will get by planting sesbania in the fields? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I may tell the hon. Member that sesbania is an easily grown seed manure plant and the ryots will have increased production if they plant sesbania in their fields."

SRI N. C. RAMASAMY KANDER :—" மலைப் பிரதேசங்களில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு விவசாய அதிகாரிகள் இருக்கும் விஷயமே அநேகமாகத் தெரியாது. விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும், விவசாயிகளுக்கு யோசனை சொல்வதற்காகவும் சர்க்கார் விவசாய டெமான்ஸ்ட்ரேட்டரையும், பீல்ட்மென், மேஸ்திரி போன்றவர்களையும் நியமித்திருக்கிறார்கள் என்ற விஷயம் அநேக கிராமங்களில், குறிப்பாக மலைப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தெரியாமல் இருக்கிறது. பிர்கா ஹெட்குவார்ட்டர்ஸில் மாத மொரு முறை கிராம ஜனங்களைக் கூட்டமாகக் கூட்டி, அந்தக் கூட்டத்தில் விவசாய டெமான்ஸ்ட்ரேடர் போன்ற அதிகாரிகள் வந்து சர்க்கார் விவசாயத்திற்காகச் செய்யக் கூடிய காரியங்களைப் பற்றியும், ஜப்பானிய நெல் சாகுபடி முறை போன்ற விஷயங்களையும் எடுத்துக் கூறினால், விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக் கூடியதாக இருக்கும். அம்மாதிரி ஏற்பாடு செய்வதற்கு கனம் மந்திரி அவர்கள் முயற்சிப்பார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினர் கூறுவது ரொம்ப நல்ல யோசனை. அந்த யோசனையை அரசாங்கம் கவனிக்கும்."

SRI A. SAMBASIVAM :—" செஸ்பேனியா, கிளிரிசீடியா போன்ற இருவகைச் செடிகளில் செஸ்பேனியாவைப்பற்றி பொதுவாக விவசாயிகளிடத்திலும் இங்குள்ள பல அங்கத்தினர்களிடத்திலும் 'அது சரியான முறையில் பயன்படவில்லை' என்ற அபிப்பிராயம் இருக்கிறது. செஸ்பேனியா விதைகளை குறிப்பிட்ட அளவு விவசாயிகளுக்கு விற்றாக வேண்டுமென்ற நிர்பந்தம் இருப்பதால் குறைந்த சம்பளமுள்ள விவசாய இலாகா சிப்பந்திகள் தங்களுடைய சம்பளத்தினின்றும் ஒன்றிரண்டு ரூபாய் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. செஸ்பேனியாவினால் பயன் இல்லை என்பதோடு அதிகமாக நேரம் செலவாகிறது, சிறு சிறு சிப்பந்திகள் தங்கள் கையிலிருந்து பணம் கட்டவேண்டிய நிலைமை ஏற்படுவது ஆகிய மூன்று காரணங்களையும் கணக்கெடுத்துக் கொண்டு செஸ்பேனியாவைச் கைவிட்டுவிடுவதினால் பெரிய நஷ்டம் வராது என்று நான் கருதுகின்றேன். ஆனால் கிளிரிசீடியா விஷயம் என்னவென்றால் அது வெட்டப்பட்டாலும் மீண்டும் மீண்டும் தழைப்பதற்கு வசதியாக இருக்கிறது. ஆகவே, கிளிரிசீடியா ஒன்றை மாத்திரம் அபிவிருத்தி செய்துக்கொண்டு, செஸபேனியாவைக் கைவிடுவதைப் பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" செஸ்பேனியாவின் நல்ல பலனைப் பற்றி இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்களும் வெளியில் உள்ளவர்களும் பெரும்பாலோர் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. செஸ்பேனியா ஒரு சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். அதற்காக அவர்கள் மாறுபட்ட அபிப்பிராயத்தை தெரிவிக்கலாம். ஆனால் விவசாயம் செய்யக்கூடிய அநேக இடங்களில் நான் போய்ப் பார்த்து பலருடைய அபிப்பிராயத்தை நான் தெரிந்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் செஸ்பேனியா விஷயத்தில் மிகுந்த திருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் அதைக் கைவிடுவது நல்லதல்ல. அதை நன்றாகப் பரவச் செய்யவேண்டுமென்று விவசாய டெமான்ஸ்ட்ரேட்டர்களுக்கும், இதர சிப்பந்திகளுக்கும் சொன்னால், அது சரியாக பயன் அளிப்பதில்லை

என்று புகார் சொல்லப்படுகிறது. விவசாய இலாகா அதிகாரிகளும் சிப்பந்திகளும் இதை நல்ல முறையில் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லி அதன் மூலம் விவசாயிகள் பலன் அடையச் செய்யவேண்டு மென்று அரசாங்கம் காரியங்களைச் செய்யும்போது கனம் அங்கத் தினர்கள் ஆட்சேபிப்பது சரியல்ல. சிப்பந்திகளின் சம்பளத்தி லிருந்து செலவிடும்படி வற்புறுத்தப்படுவதில்லை. ஓரளவு நிர்ப்பந் தம் இருந்தால்தான் வேலை சரிவர நடக்கமுடியும். ஆனால், சிப்பந்திகள் தங்களுடைய சம்பளத்திலிருந்து செலவழிக்க யாரும் வற்புறுத்தப்படமாட்டார்கள். விசாரித்ததில் அதற்கெல்லாம் இடம் இல்லையென்றுதான் தெரிந்தது.''

SRI S. R. ARUMUGAM :—'' சீமை கருவேலஞ் செடிகளை வேலிகளில் பயிரிடும்போது பயிர்களின் வேர்கள் பாதிக்கப்பட்டு பயிர்கள் கெட்டுப் போவதாக விவசாயிகள் அறிந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது அதை நடவேண்டுமென்று ஏன் விவசாயிகளை சர்க்கார் நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள் ?''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' கனம் அங்கத்தின ருக்கு நான் சொல்லுவது என்னவென்றால், அனுவசியமான வீண் பீதி கொள்ள வேண்டாம். வீண் பீதியை ஏற்படுத்தவும் வேண்டாம் என்பதுதான். நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து பார்த்துதான் சொல்லுகிறார்கள். விவசாயிகளும் இது பற்றி ஆட்சேபணை தெரிவிக்கவில்லை.''

SRI P. VENKATESA SHOLAGAR :—'' சமீப காலத்தில் கனம் மந்திரி அவர்கள் அந்த விதையைப் பிரபலப்படுத்துவதற்காக கூத்தா நல்லூரில் செஸ்பேனியா விதையைக் கொட்டி அளந்தது மாதிரியே பணத்தையும் கொட்டி அளந்து கொடுத்தார்கள் என்று சொன்னார். ஆனால், அதே சமயத்தில் தஞ்சை ஜில்லாவில் கொளிஞ்சி, பில்லிபசரா மூட்டையொன்று 15 முதல் 20 ரூபாய் வரையில் விற்றுக்கொண்டிருந்தது. இப்பொழுது 40லிருந்து 60 ரூபாய் வரையில் விற்றிருக்கிறது. கொளிஞ்சி, பில்லிபசரா விதைகளை விவசாயிகள் அமோகமாக வாங்குகிறார்கள். ஆனால், அந்த விதைகள் சல்லிசான விலையில் கிடைக்கவில்லை. அதே சமயத்தில் செஸ்பேனியாவை அரசாங்கத்தார் பிரபலப்படுத்துகிறார்கள். எந்த விதைகளை விவசாயிகள் விரும்பி எடுத்துக் கொள்ளுகிறார்களோ அந்த விதைகள் சுலபமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஆகவே பில்லிபசரா, கொளிஞ்சி விதைகளை அதிகமாக உற்பத்திசெய்வதற்காக சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ? ''

9-10 a.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' கூத்தாநல்லூரில் நடைபெற்றதைப் பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். நான் பார்த்ததிலிருந்து தெரிந்துக் கொண்டதென்னவென்றால், செஸ் பேனியாவின் உபயோகத்தை அநேக விவசாயிகள் உணர்ந்திருக் கிறார்கள், என்று புலப்பட்டது. பத்தாயிரம் ரூபாய் வரையில் செஸ் பேனியா விதை அங்கு விற்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தது. கொளிஞ்சி, பில்லிபசரா ஆகியவைகளை விவசாயிகள் உபயோகிக்க வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. விவசாயத்திற்கு உதவி யாக இருக்கக்கூடிய எல்லாவற்றிற்கும் எவ்வளவு ஆதரவு அளிக்கவேண்டுமோ அவ்வளவும் அளிக்கலாம். விவசாயிகளுக்கு எந்தெந்தவற்றில் நம்பிக்கை இருக்கிறதோ அந்த விதைகளை விவ சாயிகளே மேற்கொண்டு உற்பத்தி செய்துகொள்ளுவதற்கு முற்பட வேண்டும்.''

SRI S. RAMALINGAM :—'' செஸ்பேனியா விதைக்கும், பில்லிபசரா, கொளிஞ்சி போன்ற விதைகளுக்கும் போட்டி எங்களுடைய தஞ்சை ஜில்லாவில் கிடையாது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ வெங்கடேச சோளகர் சொன்னதென்னவென்றால் பில்லிபசரா விதைகளும் கொளிஞ்சி விதை களும் சுலபமாகக் கிடைக்கவில்லை, ஏற்கெனவே விற்றுவந்த விலையை விட மிக அதிகமாக உயர்ந்துவிட்டது, அதனால் விவசாயிகள் அதிகமாக கஷ்டப்

31st March 1955]

படுகிருர்கள் என்பதுதான். ஆகவே பில்லிபசரா, கொளிஞ்சி போன்ற விதைகளை சேகரிக்க ஏற்பாடு செய்து, சர்க்கார் இலாகா மூலமாக விவசாயி களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" எந்தெந்த விவசாயி கள் என்னென்ன ரக விதையைக் கேட்கிருர்களோ அதை சரசமான விலைக்குக் கொடுப்பதற்குத்தான் அரசாங்கம் கவனம் செலுத்திவரு கிறது."

SRI S. THINAKARASWAMI THEVAR :—" செஸ்பேனியா உண்மை யிலேயே நல்லது சிறந்தது என்றிருந்த போதிலும்கூட பயிர் களிலே கதிர் வாங்கும் காலத்தில் விசேஷ பலன் கிடைக்காமல் இருக்கிறது. செஸ்பேனியாவை பயிரிடும்போது தண்ணீரைப் பக்குவமாக உபயோகித்து பயிர் செய்தாலொழிய அதை காப்பாற்ற முடிவதில்லை. ஆனல், நெட்டி விதைகளை இலகுவாகப் பயிர் செய்யலாம். அதை உபயோகப்படுத்துவதி ஞல் விசேஷ பலன் கிடைக்கிறது. கதிர்களும் நன்ருக வருகிறது. நெட்டி விதையை எல்லா இடங்களிலும் விதைத்து தாள் உரத்தை உபயோகிக்கும் முறையில் ஏற்பாடு செய்யலாம். இதில் சர்க்கார் விசேஷ கவனம் செலு த்துவார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" சர்க்கார் கவனம் செலுத்தும். திருமங்கலம் தாலுகாவைக் சுற்றியுள்ள விவசாயி களுக்கு இதை எடுத்துச் சொல்லி, கனம் அங்கத்தினர் கொஞ்சம் ஆதரவு கொடுத்தால் விவசாய இலாகாவைப் பொறுத்த மட்டில் எவ்வளவு ஆதரவு இது விஷயத்தில் அளிக்கவேண்டுமோ அந்த அளவுக்கு ஆதரவு அளிக்கலாம் என்று கனம் அங்கத் தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்."

Local Fund Dispensary, Tirukkoyilur

* 1751 *Q.*—SRI A. MUTHUSWAMI : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have any proposal to convert the local fund dispensary in Tirukkoyilur into a Government hospital; and

(*b*) if so, the stage at which the matter stands now?

THE HON. SRI A. B. SHETTY :—" (*a*) No, Sir.

" (*b*) Does not arise."

SRI A. MUTHUSWAMI :—" திருக்கோயிலூர் லோகல் பண்டு ஆஸ்பத் திரியில் சென்ற இரண்டு வருஷ காலமாக லேடி டாக்டரைப் போடாமல் இருக்கிருர்கள். திருக்கோயிலூர் மேஜர் பஞ்சாயத்தாக இருப்பதனுலும், தாலுகாவுக்குத் தலைநகராக இருப்பதனுலும் அங்கு சிகிச்சை செய்து கொள்ள வரும் கூட்டங்களை ஒரு Male டாக்டரினுல் சமாளிக்க முடியவில்லை. ஆதலால் அந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு லேடி டாக்டரைப் நியமிப்பதற்கு சர்க்கார ஏற்பாடு செய்வார்களா ?"

THE HON. SRI A. B. SHETTY :—" The need for posting a woman doctor will be given proper consideration."